பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை : 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : கார்த்திகை 23உ (9—12—67) சனி வெளியூர் : கார்த்திகை 24உ (10—12—67) ஞாயிறு [இதழ் : 148

நீதிமன்றம் போகிறார்கள்!

இந்தி சாகித்திய சம்மேளனத் தலைவர்களான சேத் கோவிந்த தாஸ் எம்.பி., மௌலி சந்திர சர்மா, கோபால் பிரசாத் வியாஸ் ஆகியோர் நேற்று புதுடில்லியில் நடத்திய பத்திரிகையாளர் கூட்டம் ஒன்றில், "மொழிச் சட்டம்—மொழிச் சட்டத் திருத்தச்

(4-ம் பக்கம் பார்க்க)

மக்களவையில் மொழிச் சட்டத் திருத்த மசோதா :

அண்ணாவின் கருத்தினைப் பெற விரும்புகிறார் இந்திரா!

கழக உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்

மொழிப் பிரச்சினையின் உரைகல் தி. மு. கழகம்தான் !

"கடந்த இரண்டு நாட்களாக மக்களவையில் கடும் பயணம் புரிந்துகொண்டிருக்கும் மொழிச் சட்டத் திருத்த மசோதாபற்றி தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களின் கருத்தினைப் பெற விரும்பும் தலைமையமைச்சர் இந்திரா, அவருடன் தொலைபேசித் தொடர்புகொள்ள இருக்கிறார்"

என்று 'இந்து' நாளிதழின் புதுடில்லி சிறப்பு நிருபர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தி பேசும் உறுப்பினர்கள் திருத்த மசோதாவில் கோரிவரும் சில மாற்றங்கள் குறித்தும் தலைமையமைச்சர் நேற்று காலையும், அதற்கு முன்தினமும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கலந்துரையாடியிருக்கிறார்.

"திருத்த மசோவில் இந்திக்காரர்கள் கோரும் மாற்றங்களை ஏற்குமாறு இந்திரா கேட்டுக்கொண்டிருப்பதனை அடுத்து கழக உறுப்பினர் இரா. செழியன், அண்ணா அவர்களிடம் நேர்முகமாக யோசனைகளைப் பெறுவதற்காக இன்று விமானம்மூலம் சென்னைக்கு வருகிறார்" என்றும் அச்சிறப்புச் செய்தி கூறுகிறது.

[இந்திக்காரர்கள் கோரும் மாற்றங்கள் மொழிச் சட்டத்தையே கலப்படம் செய்வதுடன், அதனைக் கொண்டுவருவதன் நோக்கத்தையே பாழடிக்கிறது என்பதனை, நேற்றும், அதற்கு முன்தினமும், 'நம் நாடு' இதழ் எடுத்துக் காட்டியுள்ளது.]

"கொண்டுவரப்படும் மொழிச் சட்டத் திருத்த மசோதா இந்தி பேசாத மக்களின் பாதுகாப்புக்காகவே தவிர இந்தி பேசுபவர்களின் கூடுதல் வசதிக்காக அல்ல" என்ற அடிப்படைக் கருத்தினை மட்டும் கழக உறுப்பினர்கள், தலைமையமைச்சரிடம் உணர்த்தியிருப்பதாகத் தெரிகிறது.

இந்த இதழ் படிப்பவர்களின் நன்மையையொட்டி, இந்தி மொழிக்காரர்கள் கேட்கும் மாற்றங்கள், மீண்டும் இங்கே தரப்படுகின்றன :—

1. மத்திய அரசின் வேலை வாய்ப்புக்காகத் தேர்வு எழுதும் இந்தி மொழி பேசுபவர்களுக்கு ஆங்கில அறிவு தேவையில்லை !
2. இந்தி மொழி பேசும் மாநிலங்கள், இந்தி மொழி பேசாத மாநிலங்களுக்கு இந்தியில் மட்டும் கடிதம் எழுதலாம் (இத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் வைத்து அனுப்ப வேண்டுமா வேண்டாமா என்பதும் பரிசிலனையில் இருக்கிறது).
3. மத்திய அரசின் இரு இலாகாக்கள் அல்லது நிறுவனங்கள், இந்தி மொழியிலேயே கடிதப் போக்குவரத்துக்களை வைத்துக் கொள்ளலாம் ; இதற்கான ஆங்கில மொழி பெயர்ப்பினை உடன் அனுப்பும் வேலை அவைகளுக்கு இருக்காது ; அதனை, வேறு ஒரு பொது அமைப்பு கவனித்துக் கொள்ளும்.

காதில் விழுந்தது !

"காமராசரைத் தெரியுமா?"

"எந்தக் காமராசரை ?"

"எத்தனைப்பேர் இருக்கிறார்களாம் ?"

"அப்படியானால், ஏன் இப்படிக் கேட்டாய் ?"

"ஒன்றுமில்லை ; 'தலைவர்' சென்னை வந்து சில நாட்களும் ஆகின்றன ; நாட்டில் எத்தனையோ நடப்புகள் ; 'ஆங்கிலம்' என்கிறார்கள்—'இந்தி' என்கிறார்கள் ; ஆனால், இவரை மட்டும் 'காணோமே' என்று பார்த்தேன் !"

"ஏன்...இருக்கிறார் என்று தான் செய்தி...!"

"நான், 'காணோம்' என்றது, பத்திரிகையில் !"

வங்காளத்தில் மும்முனைப் புரட்சி?

மார்க்சிய கம்யூனிஸ்டுகளின் தீவிரத் திட்டம் !

ஐக்கிய முன்னணியின் கோரிக்கைகளுக்கு இணங்கவில்லையென்றால், டிச. 18-ந்தேதி முதல் ஒரு பெரும் மக்கள் ஒத்துழையாமைப் போராட்டம் துவங்கப்படும் என்பதனை யடுத்து, முன்னணியின் ஓர் உறுப்புக் கட்சியான இடதுசாரிக் கம்யூனிஸ்டு அமைப்பு, 'மிகத் தீவிரமான புரட்சி'த் திட்டம் ஒன்றைத் தயாரித்து வருவதாக ஆங்கில நாளிதழ் ஒன்றின் கல்கத்தா செய்தி கூறுகிறது.

'மிகவும் புரட்சிகரமாக இருக்கும்' என நம்பப்படும் இந்தத் திட்டம், மிகவும் இரகசியமாகத் தயாராகிறது என்றும், அதன் தன்மை துப்பறியும் இலாகாவினரின் புலனாய்வுக்குக்கூட அப்பாற்பட்டதாக இருக்கிறதென்றும் அச்செய்தி மேலும் கூறுகிறது.

ஐக்கிய முன்னணியிலிருந்து விடுபட்டு கம்யூனிஸ்டுகள் மட்டும் தனியாக நடத்த இருக்கும் மூன்று அம்சத் திட்டங்கள் கொண்ட இந்தப் புரட்சி, 'நக்சல்பாரி சம்பவம் போன்றுகூட இருக்கலாம்' என்று யூகிக்கப்படுகிறது.

மார்க்சிய கம்யூனிஸ்டுத் தலைவர்கள் சுந்தரய்யாவும், பசவபுன்னையாவும், புரட்சி பற்றிய திட்டங்கள் தயாரிப்பதற்காகவே கல்கத்தா சென்று தங்கியிருக்கிறார்கள் !

ஆதிக்கத்திற்கு இடம் தரோம்!

சென்னை, டிச. 9—

"மக்கள் மீது புதிதாக இந்தியைத் திணிக்க மத்திய அரசு முயன்றுவருகிறது !

"முன்பு வெள்ளையர்கள், நம் மீது ஆங்கிலத்தைத் திணித்து அதிகாரத்தை வளர்த்துக் கொண்டதைப்போல், இப்போது நம்மீது இந்தியைத் திணித்து ஆதிக்கம் செலுத்த வடநாட்டினர் முயலுகின்றனர் !

"ஆங்கிலத்தை எதிர்த்த நாம் இந்தியையும் எதிர்ப்போம் ! இந்தி நம்மீது திணிக்கப்பட ஒருபோதும் நாம் ஒருப்படோம் !

"இந்தியைவிடத் தமிழும், மலையாளமும், மற்ற பிற மொழிகளும் சிறந்த வளமுடையவை ; எனவே, இந்தியை ஒருபோதும், திணிக்க இயலாது !"

—கேரள அமைச்சர் மத்தாய்

ஆட்சி மொழி மசோதா யாருக்காக?

ஏற்றங்கொண்ட இந்தி வெறியர் எதிர்பார்ப்பது அதிகம்—அநியாயம்

தென்னாட்டவருக்குத் தொன்மை மொழிகள் உண்டு—கழகத்தவரிடம் இந்தி வெறியர்கள் சமரசத் தூது

தென் திசைக் கழகம் வடமீன் ஒளிதருகிறது

'காலாவதி'யாகிப்போன கடன் பத்திரத்திற்கு 'உயிர்' கொடுப்பதற்காகத் தன் சொத்து முழுவதையும் விலைகூறி விற்று வழக்காடும் அறிவிலியின் இடத்திற்குத் தங்களை இந்திவெறியர்கள், கடந்த ஒரு வாரகாலமாக வேகவேகமாக உயர்த்திக்கொண்டு வருகிறார்கள் !

அவர்களுக்கு நாடு—ஒற்றுமை—முன்னேற்றம் என்பனவெல்லாம் இரண்டாம்பட்சமாகி, எப்போதோ—யாராலோ—வஞ்சகத்தனமாக அரசியல் நிர்ணயச் சட்டத்தில் ஏற்றிக்கொண்ட இந்தி மொழி பற்றிய பிரிவே அவர்களுக்கு இப்போது அனைத்துமாகத் தெரிகிறது !

ஆட்சிமொழிகள் திருத்த மசோதா பற்றிய விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அரசியல் சட்டத்தை உருவாக்கும் விவாதங்களில்கூட இத்தகைய சூடு கிளம்புமா என்பது ஐயமே ! 'அரசியல் சட்டத்தில் அநியாயமாக ஏற்றிக்கொண்ட ஒரு பிரிவுக்குத் திருத்தமா அல்லது நாட்டில் பல்வேறு விதமான பிரிவுகளைக் குடிமக்களிடையே உருவாக்குவதற்கான திருத்தமா என்பதை இன்னும் நிதானிக்க முடியவில்லை !

அமெரிக்கர்களின் உணர்வு—நல்வாழ்வு—நல்லெண்ணம் ஆகியவைகளைக் காட்டிலும், 'ஸ்டாம்பு'ச் சட்டமே உயர்ந்ததாக அன்றைய இங்கிலாந்தின் இரண்டாம் மன்னன் அரசவை நினைத்ததைப் போலவே—இன்று, இந்தியத் துணைக்கண்டத்தில், இந்தி மொழிப் பிரிவையே இந்திவெறியர்கள் பெரிதென மதித்துப் பூசனை செய்துகொண்டிருக்கிறார்கள் !

நாடாளுமன்றத்தில் நடைபெறும் விவாதத்தில் இந்தி வெறியர்கள் நடந்துகொள்ளும் போக்கைப் பார்த்தால், அரசியல் விவேகமோ, நாடு அனைத்தின் நன்மையைக் கருதிய நிலைமையோ இல்லை ! வெறும் வீண் டம்பம்—பொருளற்ற வீராப்பு—அறிவுத் தெளிவில்லாதவர்களின் சிறுபிள்ளைத்தனமான போக்கு—அத்தனையும் கலவையிட்டுப் போட்டிபோடும் அநாகரிக வாதங்களாகவே அவை தெரிகின்றன !

இந்தி மொழிக்காரர்களின் வசதிக்காக—அவர்கள் மட்டுமே முதல்தரக் குடிமக்களாக வாழும் வகையில் அப்போது அரசியல் சட்டத்தில் இந்திக்கு சிறப்பிடம் அளித்து ஒரு பிரிவு சேர்க்கப்பட்டுவிட்டது !

அரசியல் சட்டத்தில் இந்தி பற்றிய சிறப்பிடம் கொடுக்கப்பட்ட 'கதை' அனைவரும் அறிந்ததே ! அந்தக் 'கதை'யை, அறிஞர் அண்ணா அவர்களைக் காட்டிலும் அதிகமாக யாரும் மக்களுக்கு விளக்கிடவில்லை ! ஏமாந்த காலத்தில் ஏற்றம்கொண்ட அற்பர்கள், அந்தக் காலத்தில் மட்டுமல்ல — இந்தக் காலத்திலும், இந்தி மொழிக்குச் சிலர் ஏற்படுத்திக் கொடுத்த சிறப்பிடம், சான்று கூறி நிற்கிறது !

அன்றைய இராசேந்திர பிரசாத் என்கிற 'இந்தி வெறியர்' ஒருவரின் முயற்சியால்—அவருடைய ஒரே ஒரு ஓட்டால்—இந்திக்கு இப்போதுள்ள 'பீடம்' கிடைத்ததை யாரும் மறுக்க முடியாது !

'இறந்துபோனவரைப் பற்றி ஒன்றும் சொல்லக்கூடாது' என்பது தமிழர்களின் பண்பாதலால், இருப்பவரிடம் அந்தப் பிரிவின் அநியாயத்தைப் பற்றி எடுத்துக்கூறி, 'திருத்தம் கொண்டு வரவேண்டும்' என்று தி. மு. கழகம் போராடிற்று—வாதாடிக் கொண்டிருக்கிறது !

ஆனால் இந்தி வெறியர்கள், அந்த அரசியல் சட்டத்தின் பிரிவைச் சொல்லிச் சொல்லியே தங்களுக்கு மாபெரும் பலம் இருப்பதாக அறைகூவிக் கொண்டிருக்கிறார்கள்.

அரசியல் சட்டத்தின் வாசகம்—
அரசியல் சட்டத்தின் நோக்கம்—

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

'நவசக்தி' இதழ்மீது அரசு தொடர்ந்த அவதூறு வழக்கு

அமைச்சர் மு. கருணாநிதி சாட்சியம்--அரசு வழக்கறிஞர், எதிர்த்தரப்பு வழக்கறிஞர்களின் குறுக்கு விசாரணையின் விவரம்

"போக்குவரத்துத் துறைப் பொறுப்பைக் கவனித்து வருகின்ற அமைச்சர்—என்கிற முறையில் திரு. கருணாநிதி அவர்கள், முந்தைய அமைச்சரவையினால் சிந்தித்துப் பரிசீலிக்கப்பட்டு வந்த ஒன்றை—அதாவது, ஸ்கூட்டர் – மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களில் செல்லக்கூடியவர்கள், தங்களுடைய பாதுகாப்பினையொட்டி, 'விபத்துத் தடுப்புத் தலை அணி' (கிராஷ் ஹெல்மட்) அணியும்படிச் செய்ய—அதற்குரிய சட்ட விதிகளைத் திருத்த அரசுக்குள்ள உத்தேசம் பற்றி (அமைச்சர்) தெரிவித்தார்.

"இதையடுத்து ஏப்ரல் 13-ந் தேதி 'நவசக்தி' இதழில், கண்ணதாசன், கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார்; 'குல்லாய் போடுகிறார் கருணாநிதி' என்ற தலைப்பில் எழுதப்பட்டிருந்த அக்கட்டுரையில், 'அமைச்சர் கருணாநிதி, ஸ்கூட்டர் தொப்பி தயாரிப்பாளர் ஒருவரிடம் ஏற்கனவே பேரம் பேசி முடித்துக்கொண்டு இப்போது அறிவிப்பை வெளியிடுகிறார்' என்று—ஊழல் நடந்திருப்பதாக உள்நோக்கம் கற்பிக்கும் முறையில்—எழுதப்பட்டிருந்தது அவதூறானது; 'போக்குவரத்து அமைச்சர்' என்ற முறையில், ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் முதலான வாகனங்களில் செல்கிறவர்களின் உயிரைக் காக்க வேண்டியது தன் கடமைகளில் ஒன்றெனக் கருதி அமைச்சர் எடுத்த நடவடிக்கையைக் குறித்து இப்படி எழுதியதன் மூலம், அமைச்சருக்குப் பொதுமக்களிடையே உள்ள நன்மதிப்பைக் குலைத்துப் பங்கப்படுத்த முயற்சி நடந்துள்ளது"

என்று, சென்னை செஷன்சு நீதிமன்றத்தில்—'நவசக்தி' இதழ் மீதான அவதூறு வழக்கு விசாரணையில் அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் சாட்சியமளிப்பதற்குமுன்—அரசு வழக்குரைஞர் பு. ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள், வழக்கின் விவரத்தை நீதிபதி அவர்களுக்கு விளக்குகையில் குறிப்பிட்டார்.

பின்னர் அவர், அமைச்சர் மு. கருணாநிதி அவர்களை விசாரணை செய்கையில் கேட்ட கேள்விகளும், அவைகளுக்கு அமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு :—

கேள்வி :—தாங்கள் இப்போது அமைச்சர் அல்லவா?

பதில் :—(அமைச்சர் மு. கருணாநிதி அவாகள்) ஆம்; தமிழக அமைச்சரவையில் நான், பொதுப் பணித் துறை—தேசியமயமாக்கப்பட்ட போக்குவரத்து—போக்குவரத்து போன்ற இலாகாக்களை நிர்வகிக்கும் அமைச்சராக இருக்கிறேன்.

கே :—எப்போது நீங்கள் அமைச்சராகப் பதவியேற்றீர்கள்?

ப :—இந்த ஆண்டு மார்ச் மாதம் 6-ந் தேதியன்று அமைச்சராகப் பதவியேற்றேன்.

கே :—ஸ்கூட்டர்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் செல்பவர்களைப் பாதுகாக்கும் விஷயத்தில் நீங்கள் எப்படிப் பொறுப்புடையவர் ஆவீர்கள்?

ப :—நான் தமிழக அமைச்சரவையில், 'போக்குவரத்துத் துறையை நிர்வகிக்கும் அமைச்சர்' என்ற முறையில்—ஸ்கூட்டர்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் செல்பவர்களின் உயிர்களைப் பாதுகாப்பது என்னுடைய கடமை என்று கருதினேன்.

கே :—இதற்காக என்ன செய்தீர்கள்?

ப :—எனக்கு வழக்கமாக வந்த 'பைல்'களைப் பார்த்தபோது, 'ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள்களில் போகின்றவர்களுடைய உயிரைப் பாதுகாப்பதற்காகச் சில விதிமுறைகளைச் சேர்க்கலாம்' என்று உணர்ந்தேன்.

கே :—ஸ்கூட்டர்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் செல்கின்றவர்கள், கட்டாயமாகத் தொப்பி (க்ராஷ் ஹெல்மெட்) அணிய வேண்டும் என்று ஏதாவது திட்டம், முன்பு இருந்ததாகத் தங்களுக்குத் தெரியுமா?

ப :—பழைய காங்கிரசு அரசாங்கத்திலேயே இவ்விதம் ஒரு திட்டம் இருந்ததை நான் எனக்கு வந்த 'பைலி'லிருந்து தெரிந்து கொண்டேன்.

நீதிபதி :—இந்த 'ஹெல்மெட்' மெட்டலில் செய்யப்படுவதா?

ப ;—இல்லை ; 'பைபர் கிளாசி'ல் செய்யப்படுகின்ற ஒன்று.

கே :—இவ்விதம் தொப்பி அணியவேண்டும் என்ற எண்ணம் முன்பிருந்த அரசாங்கத்திற்கு எப்போதிலிருந்து உண்டாயிற்று என்பதைக் கூற முடியுமா?

ப ;— மதிப்பிற்குரிய பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் இந்தத் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள்.

கே :—இந்தத் திட்டத்தின்மீது தாங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?

ப :—இந்தத் திட்டம் பற்றிய 'பைல்' எனக்கு வந்தபோது ஸ்கூட்டர்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் போகிறவர்கள் அடிக்கடி அடிபட்டு—தலையில் பலத்த காயமேற்பட்டு உயிரிழக்க வேண்டிய நிலை ஏற்படுவதால், இதிலுள்ள ஆபத்தை உணர்ந்து, இதைத் தவிர்ப்பதற்கு ஹெல்மெட் அணியலாம் என்று கூறப்பட்டிருந்தது; அந்தக் குறிப்பின் மீது நம்பிக்கை ஏற்பட்டு, மோட்டார் வாகனச் சட்டத்தில் சில விதி முறைகளை இணைப்பது பற்றிப் பரிசீலனை செய்யுமாறு நான் ஆணை பிறப்பித்தேன்.

கே:—(எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு. வி. பி. இராமன் குறுக்கிட்டு) அந்தப் 'பைலை'ப் பார்த்தபோது, அமைச்சர் அவர்களுக்கு என்ன நினைப்பு ஏற்பட்டது?

ப :— அதில் குறிப்பிட்டது போன்று, 'விதிமுறைகளைச் சேர்ப்பது நல்லது' என்று நினைத்தேன்.

கே :—(திரு. வி. பி. இராமன் குறுக்கிட்டு) இது விஷயமாக ஏதாவது நீங்கள் விளம்பரம் செய்வதற்கு உத்தரவிட்டீர்களா?

ப :— இம்மாதிரி ஹெல்மெட் அணியவேண்டும் என்று உத்தரவிடுவதற்கு அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது. இதன்மீது பொதுமக்களுக்கு ஆட்சேபனை இருந்தால், 'தெரிவிக்கலாம்' என்கின்ற விளம்பரத்தை வெளியிடுவதற்கு உத்தரவிட்டேன்.

கே :—இந்த ஸ்கூட்டர் தொப்பி உற்பத்தி செய்கிறவர்களில் யாராவது உங்களுக்கு நண்பர்கள் இருக்கிறார்களா?

ப :—இல்லை ; அவ்விதம் யாரும் எனக்கு நண்பர்கள் இல்லை.

கே :—கட்டாயமாக, 'இந்தவிதமான தொப்பி அணியவேண்டும்' என்று திட்டத்தை வெளியிட்டபோது, இது சம்பந்தப்பட்ட எந்த வியாபாரியிடமாவது நீங்கள் பேரம் பேசியதுண்டா?

ப :—இல்லை ; அப்படிச் சொல்வது தவறு.

கே :—1967 ஏப்ரல் மாதத்தில் நீங்கள் பத்திரிகை நிருபர்களிடத்தில் பேசியபோது, ஹெல்மெட்டின் விலையைப் பற்றி ஏதாவது கூறினீர்களா?

ப :—'20 ரூபாய் விலை யிருக்கலாம்' என்று கூறினேன்.

கே :—இதன் விலை 50 ரூபாய் என்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?

ப :—பழைய சர்க்கார் ஆரம்பித்திருந்த பைலில் இந்த விலை விவரம் இருந்தது.

கே :—இந்த ஸ்கூட்டர் தொப்பிகள் அரசாங்கத்தால் உற்பத்தி செய்யப்படுமா அல்லது தனியார் துறையில் உற்பத்தி செய்யப்படுமா?

ப :—பொதுமக்களுடைய கருத்தை அறிவதற்காக, 'கட்டாயமாகத் தொப்பி அணிய வேண்டும்' என்ற திட்டத்தைப் பிரசுரிக்க உத்தரவிடப்பட்டதே தவிர, 'தொப்பியை யார் உற்பத்தி செய்வது' என்பதைப் பற்றி முடிவு எடுக்கப்படவில்லை.

கே :—இப்போதாவது, 'இந்த ஸ்கூட்டர் தொப்பிகளை யார் உற்பத்தி செய்வது' என்பதைப் பற்றி ஏதாவது முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதா?

ப :—இன்னும் எந்தவிதமான முடிவும் அரசாங்கத்தால் எடுக்கப்படவில்லை.

கே :—13—4—67-ந்தேதிய 'நவ

(3-ம் பக்கம் பார்க்க)

திருச்சி சீரணியின் திருப்பணி!

அவர்கள் 1,500 பேர் ; எங்கெங்கிருந்தோ வந்தவர்கள் ; ஆனால், எண்ணத்தால் ஒன்றாகிப் போனவர்கள் !

அவர்களில் பலர் நகரங்களில் இருந்துவந்தவர்கள் ; சிலர் நாட்டுப்புறத்தவர் !

கல்லூரி மாணவரும் ஆசிரியருமாய்ச் சில பேர்! வழக்கறிஞரும் உண்டு அந்தக் கூட்டத்தில் !

காடு திருத்திப் பழக்கமில்லா கைகள் அவர்களுக்கு ; ஆனால், காடுகளை அவர்கள் திருத்திக் கொண்டிருக்கிறார்கள் !

கழனி செய்யத் தெரியாதவர்கள் அவர்கள் ; ஆனால், காட்டை அழித்துக் கழனி செய்து கொண்டிருக்கிறார்கள் !

அதோடு மட்டுமல்ல ; ஏரி சீர் செய்கிறார்கள் ; கரை அமைக்கிறார்கள் ; பாதை போடுகிறார்கள் ; குளம் வெட்டுகிறார்கள் ; செடி வைக்கிறார்கள் ; பள்ளிக் கட்டடம் கட்டுகிறார்கள் ; இன்னம் என்னென்னவோ செய்கிறார்கள் ! மனித ஆற்றலுக்கு உட்பட்டனவெல்லாம் செய்கிறார்கள் !

அவர்கள் முயற்சி, திருவினை யாக்கிக் கொண்டிருக்கிறது—திருச்சிக்கு வளமையைக் கூட்டிக் கொண்டிருக்கிறது !

செப்டம்பர் திங்கள் மூன்றும் வாரத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்கள், மண்ணைப் பொன்னாக்கும் தம் கரங்களால் துவக்கிவைத்த திருச்சி மாவட்டச் சீரணியின் சிறப்புமிக்க செயல்களை எப்படிச் சொல்வது ?

39 சமுதாய நலத் திட்டப் பகுதிகளிலிருந்து பகுதிக்கு 30 பேரையும், திருச்சி—கரூர்—புதுக்கோட்டை போன்ற நகரங்களிலிருந்து 233 பேரையும், கல்லூரிகளிலிருந்து 82 பேரையும், திருச்சி வழககறிஞர் சங்கத்திலிருந்து 7 பேரையும் உள்ளடக்கி இருக்கிறது இந்தச் சீரணி !

'திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணை அமைப்பு இந்தச் சீரணி'—என்று, இன்னமும் முடக்குவாதம் செய்யும் முரட்டு அரசியல்வாதிகள், திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையைப் பார்த்தாவது புரிந்துகொள்ளட்டும் !

சீரணி அமைப்பு—பயிற்சி—செயல் முறை பகுப்பு ஆகிய பூர்வாங்க வேலைகளில் கிட்டத்தட்ட ஒரு மாத காலம் போக, அக்டோபர் மத்தியில் தொண்டர்கள், தம் பணியைத் தொடங்கினார்கள் !

300 பேர் கொண்ட முதல் அணி, குடுமியாமலைப் பகுதியில் 'கை' வைத்தது ; அதுவரையில், பல்லவப் பேரரசின் இருண்டுகிடந்த வரலாற்றில் ஆங்காங்கே ஒளியூட்டும் வகையில் பண்டிதர் நாவில் மட்டுமே பயின்றுவந்த குடுமியாமலை, பத்திரிகைகளில் 'செய்தி' ஆயிற்று !

புதுக்கோட்டைப் பகுதியில் தொடங்கப் பெற்ற இந்தக் 'குடுமியாமலை பலநோக்கு உழவுத் திட்டம்' இந்தியத் துணைக் கண்டத்தின் கவனத்தைத் தன்பால் ஈர்த்துள்ளது !

அங்கே காடு திருத்தச் சென்றவர்கள், காப்பார் இன்றிப் புறக்கணிக்கப்பட்டிருந்த ஏரி ஒன்றைக் 'கண்டுபிடித்தனர்'—ஆம் ; கண்டுபிடித்தனர் !

வெள்ளையருக்குப் பின்னால் 20 ஆண்டுகள் தொடர்ந்து ஆண்ட காங்கிரசு ஆட்சியில் மூடிக்கிடந்த அந்த ஏரி, சீரணி உதவியால் வெளி உலகுக்குத் துலக்கமாயிற்று ! 'அது ஓர் ஏரி' என்ற எண்ணமே மக்கள் மனத்தில் ஏற்படாத அளவுக்கு அது, தூர்ந்து கிடந்தது !

15 ஏக்கர் நிலப்பரப்புள்ள அதன் படுகையை ஆழப்படுத்திச் செம்மை செய்து, 1500 அடி நீளமும் எட்டடி உயரமும் மூன்றடி அகலமும் உள்ள கரைகட்டி இருக்கிறார்கள்—இந்தச் சீரணிப் படையினர் ! 9.12.67

இதுமட்டும் அல்ல ; சீரணி அமைத்த நாள் முதல் இந்த இரண்டரை மாதங்களுக்குள் 21 வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு முடிவு பெற்றுள்ளன ! இவற்றின் விளைவாய்த் திருச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் நேரடியான—உடனடியான பலனைப் பெற்றுள்ளன !

அரியலூர் பகுதியில் உள்ள மணக்குடி கிராமத்தைச் சேர்ந்த 'பெரிய ஏரி'யின் கண்மாய் உடைப்பெடுக்க உரிய நேரத்தில் அதை அடைத்துப் பாசனக்காலை ஆழப்படுத்தியதன் விளைவால், நவம்பர் 4-ந்தேதி முதல் 60 ஏகர் பரப்புள்ள நெல் வயல்கள் உடனடி பலனைப் பெற்றுள்ளன !

அண்மையில் தொடங்கப்பெற்ற அரியலூர் அரசினர் கல்லூரி மாணவர்கள், இந்தத் திருப்பணியில் ஈடுபட்டுச் சீரணிக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள் !

திருவங்கனூர் கிராமத்தில் குழிகள் போட்டுத் தென்னை, மா, பலா, மாதுளை போன்ற பயன்தரு மரக்கன்றுகளை நட்டுப் பஞ்சாயத்து வருமானத்துக்கு வழி செய்திருக்கிறார்கள் !

மணப்பாறை அருகில் உள்ள சேதுரத்னபுரம் கிராமத்தின் சேரி சீரமைப்பு வேலையில், நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள் மனமுவந்து ஈடுபட்டிருக்கிறார்கள் !

கஸ்பா மருதூரில் ரூ. 15,000 மதிப்புள்ள பெரிய பள்ளிக் கட்டிடம் ஒன்றினைச் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். கந்தசாமி அவர்கள் தலைமையில் கட்டி முடித்திட குளித்தலைச் சீரணி முடிவு செய்திருக்கிறது.

'மக்களின் வரிப்பணத்தை எடுத்துச் சீரணிக்குச் செலவிடுகிறார்கள்' என்று பிரசாரம் செய்யும் பொழுதுபோக்கு அரசியல்வாதிகளின் பொய்மையைப் புலப்படுத்தும் வகையில், 'இந்த ஆண்டு திருச்சி மாவட்டத்துக்காக ஒதுக்கிய ரூ. 65,000-ல் ஒரு காசுகூட இன்னம் செலவழிக்காமலேயே இத்தனையும் சாதிக்கப்பட்டிருக்கின்றன' என்று ஆணித்தரமாகக் கூறுகிறார் திருச்சி கலெக்டர் !

அரசாங்கத்தின் ஆணைகளுக்காகக் காத்திராமல் விருப்புள்ள மக்கள் தாமாக முன்வந்து குடிமராமத்து வேலைகளைச் செய்யத் தொடங்கிவிட்டார்கள் !

காந்தியடிகள் கண்ட கனவை—தன்னம்பிக்கையை வளர்க்கும் முறையை—காங்கிரசுக்காரர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், 'தென்னாட்டுக் காந்தி' அண்ணா அவர்களால் தான் செயல்படுத்த முடிந்தது ! அதன் விளைவே சீரணிப் படை !

துடிப்புள்ள மாணவர்களிடையே தேங்கிக் கிடக்கும் ஆற்றலை முறையாக வெளிப்படுத்தும் அமைப்பே சீரணிப் படை !

சோம்பிக் கிடக்கும் உள்ளங்களில் சுறுசுறுப்புப் புத்துணர்ச்சியும் ஊட்டுவதே சீரணிப் படை !

தமிழரிடை இயல்பாக உள்ள தியாக மனப்பான்மையை முறையாகப் பயன்படுத்திக்கொள்ளும் நல்ல அணிவகுப்பே சீரணிப் படை !

எதற்கெடுத்தாலும் அரசாங்கத்தைத் தேடி ஓடிக் கொண்டிராமல், மக்கள் தம் கூட்டு முயற்சியில் நன்மை குலவிடச் செய்யமுடியும் என்பதன் வெளிப்பாடே சீரணி !

திருச்சி மாவட்டச் செயலாளர் சீரனியின் இந்தச் சிறப்புமிக்க பணிகளைக் கண்டபிறகாவது, சீரணிபற்றி தாங்கள் உளறிக் கொட்டும் அர்த்தமற்ற வாதங்களை விடுத்துக் காங்கிரசார், நா காப்பார்களாக !

—முத்து

அமைச்சர் மு.கருணாநிதி சாட்சியம்--குறுக்கு விசாரணை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சக்தி'யில் வந்த பத்திரிகைக் குறிப்பை நீங்கள் பார்த்தீர்களா?

ப :—இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இரண்டு, அல்லது மூன்றும் வாரத்தில் இதை நான் படித்தேன்.

(அரசாங்க வழக்கறிஞர் 13—4—67-ந் தேதிய 'நவசக்தி' பத்திரிகையில் வெளிவந்திருந்த குறிப்பிட்ட செய்திப் பகுதியைக் காட்டி)—

கே :—இதுதான் நீங்கள் பார்த்த பத்திரிகைச் செய்தியா?

ப :—ஆம்; இதுதான்.

கே :—இந்தப் பத்திரிகைச் செய்தியைப் படித்தபோது உங்களுக்கு என்ன மனநிலை ஏற்பட்டது?

ப :—அதைப் படித்தவுடன், பொதுமக்களிடம் எனக்கு இருந்த என்னுடைய நற்பெயருக்கும், மரியாதைக்கும், இந்தச் செய்தியால் களங்கம் ஏற்பட்டிருக்கிறது—என்று நான் கருதினேன்; 'தமிழக அமைச்சரவையில் ஒருவன்' என்ற முறையில், என்மீது எழுதப்பட்ட இந்த வாசகங்கள், வேண்டுமென்றே, 'பொதுமக்களிடம் களங்கம் ஏற்படுத்தவேண்டும்—கெட்ட பெயரை ஏற்படுத்தவேண்டும்' என்ற தீயநோக்கத்தோடு வேண்டுமென்றே எழுதப்பட்டிருக்கிறது—என்று நான் எண்ணினேன்.

கே :—13—4—67-ந் தேதிய 'நவசக்தி' பத்திரிகையில்—மான நஷ்ட குற்றச்சாட்டுக்குரிய இந்தப் பத்திரிகைச் செய்தியைப் பார்த்ததும்—அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?

ப :—இந்தப் பத்திரிகைச் செய்தியைப் பார்த்ததும், போலீசு இன்ஸ்பெக்டர்-ஜெனரலைத் தொலைபேசியில் அழைத்து, 'இதன்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்று குறிப்பிட்டேன்.

கே :—நீங்கள் பார்த்த பத்திரிகையில், யாரோ ஒரு குல்லாய் வியாபாரியுடன் பேரம் பேசிக்கொண்டு கருணாநிதி இந்த அறிவிப்பைத் தந்திருக்கிறார்—என்று இருக்கிறது அல்லவா? அப்படி ஏதாவது ஸ்கூட்டர் தொப்பிகள் உற்பத்தி செய்யும் வியாபாரிகள் யாரையாவது உங்களுக்குத் தெரியுமா?

ப :—தெரியாது.

கே :—அப்படி எழுதப்பட்டிருப்பது தவறு; அப்படித்தானே?

ப :—ஆம்; தவறு.

கே :—இந்தத் தொப்பி உற்பத்தி செய்கிற வியாபாரி ஒருவரிடம் பேரம் பேசிவிட்டுத்தான் இந்தத் திட்டத்தை அறிவீத்தீர்களா?

ப :—இல்லை.

கே :—இந்த ஸ்கூட்டர் தொப்பியின் விலை—இதை யார் யார் உற்பத்தி செய்கிறார்கள்—என்கிற விவரத்தையெல்லாம் யார் சேகரித்து வைத்திருந்தார்கள்?

ப :—பழைய சர்க்காரிலேயே இதைச் சேகரித்து வைத்திருந்தார்கள்.

கே :—இந்தத் தொப்பி உற்பத்தி செய்கிறவர்களில் யாராவது ஒருவர் அனுகூலம் அடையவேண்டும் என்றோ, அல்லது இலாபம் அடையவேண்டும் என்றோ உங்களுக்கு எண்ணம் இருந்ததா? அந்த எண்ணத்தின்மீதுதான், 'எல்லோரும் கட்டாயம் தொப்பி அணியவேண்டும்' என்று அறிவித்தீர்களா?

ப :—இல்லை; ஹெல்மெட் உற்பத்தி செய்கின்ற நண்பர்கள் யாரும் எனக்கு இல்லை. அப்படி ஒருவர் இலாபம் அடையவேண்டுமென்றோ அல்லது அனுகூலம் அடையவேண்டும் என்றோ எனக்கு எண்ணம் கிடையாது; அந்த எண்ணத்தின்மீது இதை நான் அறிவிக்கவில்லை; பொதுமக்களின் உயிரைப் பாதுகாப்பதற்காச, 'இவ்விதம் ஹெல்மெட் அணிவது நல்லது' என்று பழைய சர்க்கார் திட்டமிட்டிருந்ததால், 'விதிமுறைகளில் சேர்க்கலாமா என்பதைப் பற்றி பரிசீலிக்கலாம்' என்று நான் ஆணை பிறப்பித்தேன்.

கே :—"இந்தத் தொப்பி உற்பத்தி செய்யும் ஒரு வியாபாரியிடம் பேரம் பேசிக்கொண்டு—அவரை ஆதரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில்தான் ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள்களில் போகின்றவர்கள் அனைவரும் இந்தத் தொப்பியை அணியவேண்டும் என்று உத்தரவிட்டீர்கள்; இவ்விதமான சலுகை கொடுப்பதற்கு, 'அமைச்சர்' என்ற முறையில் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்திருக்கிறீர்கள்" என்று சொல்லப்படும் குற்றச்சாட்டு உண்மையா, இல்லையா?

ப :—என்மீது இந்தக் குற்றச்சாட்டு 'நவசக்தி' பத்திரிகையில் வந்திருக்கிறது; ஆனால் இந்தக் குற்றச்சாட்டு உண்மையல்ல.

கே :—இந்தப் பத்திரிகைச் செய்தியால் நீங்கள் எப்படிப் பாதிக்கப்பட்டீர்கள்?

ப :—இந்தப் பத்திரிகைச் செய்தி வெளிவந்தபோது, என்னுடைய நண்பர்கள் பலரும் என்னுடைய நண்பர்கள் பலரும், என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் பலரும் என்னைப் பார்க்கும்போது, 'எப்படி இந்த செய்திவந்திருக்கிறது; இதன் விவரம் என்ன?' என்று என்னிடம் கேட்டார்கள். அப்படிக் கேட்கும்போது, 'இவர்கள் எல்லாம் நம்மைப் பார்த்துச் சந்தேகப்படுகிறார்கள்' என்கிற அளவுக்கு என்னுடைய மனம் புண்பட்டது.

கே :—'நவசக்தி' பத்திரிகை எந்தக் கட்சியைச் சார்ந்த பத்திரிகை என்று கூற முடியுமா?

ப :—காங்கிரசுக் கட்சியைச் சார்ந்தது.

கே :—இந்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களாக இருக்கும் திரு. கண்ணதாசன், திரு. தனுஷ்கோடி, திரு. சம்பத் இவர்களெல்லாம் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று சொல்ல முடியுமா?

ப :—காங்கிரசுக் கட்சியைச் சார்ந்தவர்கள்.

கே :—இந்தப் பத்திரிகைச் செய்தியால் உங்களுடைய புகழுக்கும் பெயருக்கும் இழுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று கருதுகிறீர்களா?

ப :—ஆம்; இதனால் என்னுடைய புகழுக்கும், நற்பெயருக்கும் இழுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன்.

கே :—நீங்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்?

ப :—நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன்.

கே :—தற்போது சென்னை மாநிலத்தை எந்தக் கட்சி ஆளுகின்றது?

ப :—தற்போது தமிழகத்தை திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டுகொண்டிருக்கிறது.

கே :—இந்த வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள திரு. கண்ணதாசன் இங்கு வந்திருக்கிறாரா? 'இவர்தான் கண்ணதாசன்' என்பதை உங்களால் காட்ட முடியுமா?

ப :—முடியும்; (திரு. கண்ணதாசன் அவர்களை சுட்டிக்காண்பித்து) 'இவர்தான் கண்ணதாசன்.'

எதிர்தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை

அடுத்ததாக இந்த வழக்கில் ஒன்றுவது எதிரியான திரு. கண்ணதாசன் அவர்களின் வழக்கறிஞர் திரு. வி. பி. இராமன், அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களைக் குறுக்கு விசாரணை செய்தார்; அதன் விவரம் வருமாறு:—

கே :—அரசியல் சட்டத்தின் 166-வது பிரிவின்படி எந்தெந்த அமைச்சர் எந்தெந்த இலாக்காக்களை நிர்வகிப்பது என்கிற முறையில்—இந்த சென்னை மாநிலத்திலும் இலாகாக்கள் பிரிக்கப்பட்டிருக்கிறது அல்லவா?

ப :—ஆம்.

கே :—அவ்வாறு இலாகாக்களை வகுத்துக் கொடுத்திருக்கும் ரிக்கார்டுகள், வல்லமைச் செயலகத்தில் இருக்கிறது அல்லவா?

ப :—ஆம்.

கே :—அந்த ரிக்கார்டைப் பார்த்தால், 'எந்த அமைச்சருக்கு எந்தெந்த இலாகாக்கள் பொறுப்பில் இருக்கிறது' என்பது தெளிவாகும், அல்லவா?

ப :—ஆம்; தெளிவாகும்.

கே :—தாங்கள் தேசியமயமாக்கப்பட்ட போக்குவரத்து இலாகா பொறுப்பை பார்க்கிறீர்கள் அல்லவா?

ப :—ஆம்; தேசியமயமாக்கப்பட்ட போக்குவரத்து இலாகா என் சம்பந்தப்பட்டது.

கே :—அண்மையில் சர்க்கார், சில பஸ் ரூட்டுகளை தேசியமயமாக்கியதும், அதைப் பற்றி உயர் நீதிமன்றத்தில் 'ரிட்'டுகளும், 'ரிட்-அப்பீல்'களும் தாக்கல் ஆனதை தாங்கள் அறிந்திருப்பீர்கள் அல்லவா?

ப :—அறிந்திருக்கிறேன்.

கே :—உயர் நீதிமன்றத்தில், தலைமை நீதிபதி அவர்களும், இன்னொரு நீதிபதி அவர்களும் இந்த வழக்குகளில் தீர்ப்புக் கூறியிருப்பது தங்களுக்குத் தெரியும் அல்லவா?

ப :—தெரியும்.

கே :—இந்த இலாகாக்கள் தங்கள் பொறுப்பில் இருக்கிறது என்பதற்கான ரிக்கார்டுகளை உயர் நீதிமன்றத்தில் அரசாங்க வழக்கறிஞர் (அட்வகேட்-ஜெனரல் அவர்கள்) ஆஜர்படுத்தியது தங்களுக்குத் தெரியுமா?

ப :—ஆஜர்படுத்தியிருக்கலாம்.

கே :—அந்த வழக்குகளில், தேசியமயமாக்கும் இலாகா தவிர, 'டிரான்ஸ்போர்ட் உங்களுடையதல்ல' என்று உயர் நீதிமன்றத்தில் தீர்ப்புக் கூறப்பட்டிருப்பது தங்களுக்குத் தெரியுமா?

ப :—அப்படிக் கூறியதாகத் தெரியவில்லை.

கே :—'மோட்டார் வெகிக்கல்ஸ் ஆக்ட்' சம்பந்தப்பட்ட இலாகா, உள்துறை அமைச்சகத்தைச் சார்ந்தது என்பது தங்களுக்குத் தெரியுமா?

ப :—டிரான்ஸ்போர்ட் இலாகாவை மட்டுமன்றி வேறு சில இலாகாக்களும் உள்துறையில் சேர்ந்தது என்பது எனக்குத் தெரியும்; பழைய சர்க்காரிலும் அப்படித்தான் பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது.

கே :—பஸ் பெர்மிட் வழங்கும் பொறுப்பு, தங்களைச் சார்ந்ததா?

ப :—பஸ் பெர்மிட் வழங்கும் பொறுப்பு ஆங்காங்கு இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவரைச் சார்ந்தது.

கே :—டிரான்ஸ்போர்ட் கமிஷனர் தங்கள் இலாகாவிற்கு உட்பட்டவர்தானே?

ப :—ஆம்; டிரான்ஸ்போர்ட் கமிஷனர் என்னுடைய இலாகாவிற்கு உட்பட்டவர்தான்.

கே :—தாங்கள் அரசாங்க வழக்கறிஞர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லும்போது, 'பழைய அரசாங்கம் இந்த ஹெல்மெட் போடும் திட்டத்தைக் கொண்டுவந்திருந்தது என்பதை, ஆற்கான 'பைலி'லிருந்து தெரிந்தது என்று சொன்னீர்கள்; அதை நீங்கள், பரிசீலிக்கும்படி உத்தரவிட்டதாகவும் சொன்னீர்கள்; இந்தக் குறிப்புகள் எல்லாம் உள்ள 'பைல்', இப்பொழுது செக்ரடேரியட்டில் இருக்கிறதா? அல்லது காணமற் போய்விட்டதா?

ப :—செக்ரடேரியட்டில் இருக்கிறது; கொளுத்தப்படவில்லை.

கே :—யார் யார் என்னென்ன உத்தரவிட்டார்கள் என்பதெல்லாம், அந்தப் 'பைல்' கொண்டு வரப்பட்டால்—அதைப் பார்த்தால் புலப்படும் அல்லவா?

ப :—புலப்படும்.

கே :—இந்தத் தொப்பியின் விலை விவரமும் அந்தப் 'பைலி'ல் இருக்கும் அல்லவா?

ப :—ஆம்; அந்தப் 'பைலி'ல் இருக்கிறது.

கே :—இப்படிப்பட்ட குல்லாய் வியாபாரிகள் யாராவது சர்க்காருடன் தொடர்பு கொண்டிருந்தார்களா என்பது அந்தப் 'பைலி'ல் இருக்கும் அல்லவா?

ப :—அந்தப் 'பைலை'ப் பார்த்தால் தெரியும். நிச்சயமாக இந்தச் சர்க்கார், எந்தக் குல்லாய் வியாபாரியுடனும் தொடர்பு கொள்ளவில்லை; முந்தைய சர்க்கார் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பது அந்தப் 'பைலை'ப் பார்த்தால் தெரியும்.

கே :—(அரசு வழக்கறிஞர் குறுக்கிட்டு) இந்தச் சர்க்கார் எந்தக் குல்லாய் வியாபாரியுடனாவது தொடர்பு கொண்டிருக்கிறதா?

ப :—இந்தச் சர்க்கார் தொடர்பு கொள்ளவில்லை; பழைய சர்க்கார் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பது அந்தப் 'பைலை'ப் பார்த்தால் தெரியும்.

கே :—நான் தெளிவாகக் கேட்க விரும்புவது இந்த சர்க்காரோ அல்லது பழைய சர்க்காரோ, குல்லாய் வியாபாரிகளுடன் ஏதாவது தொடர்பு கொண்டிருந்தார்களா என்பது. இந்தப் 'பைலை'ப் பார்த்தால் விளங்கும் அல்லவா? அதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.

ப :—விளங்கும்.

கே :—இந்தச் சர்க்கார் தொடர்பு கொள்ளவில்லை என்பதும் விளங்கும் அல்லவா?

ப :—விளங்கும்; நிச்சயமாக இந்தச் சர்க்கார் தொடர்பு கொள்ளவில்லை என்பதும், அந்தப் 'பைலை'ப் பார்த்தால் தெரியும்.

கே :—பத்திரிகை நிருபர்களிடம் இது விஷயமாக நீங்கள் பேசியதாகக் கூறினீர்கள்; அதற்குப் பிறகு நீங்கள் கூறிய செய்தியைப் பற்றிப் பத்திரிகைகளில் வந்ததைப் பார்த்தீர்களா?

ப :—நான் பத்திரிகை நிருபர்களிடத்தில் சொன்ன விஷயத்தைப் பத்திரிகைகளில் பார்த்தேன்.

கே :—(8-4-67-ல் வெளியான 'தினமணி' பத்திரிகையை அமைச்சர் அவர்களிடம் கொடுத்து) தயவு செய்து இந்தப் பத்திரிகையைப் பாருங்கள்; இதை நீங்கள் முன்பு பார்த்ததாக நினைவு இருக்கிறதா?

ப :—பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் நான் பேசியதாகப் போட்டிருப்பதை, நான் பார்த்திருக்கிறேன்.

கே :—இதில் எழுதியிருப்பது சரியாக இருக்கிறது என்று நினைத்தீர்களா?

ப :—நான் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் பேசியதை சரியாகப் புரிந்துகொண்டு எழுதியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

கே :—இதை 'ஸ்டேட்மெண்டா'கக் கொடுத்தீர்களா அல்லது அவர்களிடத்தில் அவர்களைச் சந்தித்தபோது சொன்னீர்களா?

ப :—சந்தித்தபோது சொன்னேன்.

கே :—இதில் ('தினமணி'யில்) கடைசி பாராவில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தீர்கள்? 'நகரக் கம்பெனி ஒன்று தயாரிக்கப் போவதாகவும் சொல்லப்படுகிறது' என்று எழுதியிருப்பதைப் பார்த்தீர்களா?

ப :—நான் அவர்களிடத்தில் சொன்னதைப் போட்டுவிட்டு, கடைசியில், 'நகரக் கம்பெனிக்காரர்கள் தயாரிக்கப் போவதாகவும் சொல்லப்படுகிறது' என்று அவர்களாகவே போட்டிருக்கிறார்கள்; அவைகள், நான் சொன்னது அல்ல.

கே :—பத்திரிகை நிருபர்களிடம் நீங்கள் சந்தித்துப் பேசியபோது இது சம்பந்தப்பட்ட 'பைலை'த் தந்தீர்களா?

ப :—இல்லை.

கே :—'இந்தத் தொப்பியின் விலை தோராயமாக 50 ரூபாய் இருக்கும்' என்று அந்தப் 'பைலி'ல் இருந்துதானே கண்டு சொன்னீர்கள்?

ப :—ஆம்.

கே :—'நவசக்தி'யில் இந்தச் செய்தி பிரசுரமானதும், நீங்கள் ஐ. ஜி. அவர்களிடம், 'இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்று சொன்னதாகக் கூறினீர்கள்; இதற்கான வழக்குத் தொடருவதற்கு முன்பு இதற்காக வேறு ஏதேனும் நடவடிக்கை எடுத்தீர்களா?

ப :—இந்தச் செய்தி பிரசுரமானதும், 'இதன்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்று ஐ. ஜி. அவர்களிடம் சொன்னேன்; பின்னால் இது சம்பந்தமான 'பைல்', தலைமைச் செயலாளரிடமிருந்து என்னுடைய ஒப்புதலுக்காக வந்தது.

கே :—இந்த வழக்கு சம்பந்தமாக அரசு வழக்கறிஞரிடம் ஏதாவது கலந்ததுண்டா?

ப :—அரசு வழக்கறிஞரிடம் கலந்தாலோசிக்கவில்லை.

கே :—அரசு வழக்கறிஞர்கள் இரண்டு பேர்கள் இருக்கிறார்கள்; அதாவது திரு. கோகுலகிருஷ்ணன் அவர்கள் — திரு. இராசமாணிக்கம் அவர்கள்; இவர்களில் யாரிடமாவது கலந்தீர்களா?

ப :—இருவரிடமும் கலக்கவில்லை.

கே :—யார், யார்மீது இந்த வழக்குத் தொடரவேண்டும் என்று தங்களால் ஆலோசனை எதுவும் தரப்படவில்லை அல்லவா?

ப :—நான் தரவில்லை.

கே :—'நவசக்தி'யின் பிரசுரத்தில், கடைசியில் ஒரு கேள்வியைக் கேட்டு, 'இதற்கு விளக்கம் தேவை' என்று கேட்டு எழுதியிருக்கிறார்கள் அல்லவா?

ப :—ஆம்.

கே :—அப்படி 'நவசக்தி'க்கு ஏதாவது சமாதானம் சொல்லி ஏதாவது அறிக்கை விட்டீர்களா?

ப :—இல்லை; அதிலேயே 'ஆரம்பத்தில் நான் முடிவு செய்துவிட்டு இதை அறிவித்திருப்பதாக'ச் சொல்லியிருக்கிறார்கள்; இத்தனையும் சொல்லிவிட்டு, கடைசியில் கேள்வி கேட்டிருப்பது சரியல்ல என்று கருதினேன்.

கே :—அதாவது, 'நவசக்தி'க்கு நீங்கள், 'இவ்விதம் எழுதியிருப்பது தவறு; இது உண்மைக்கு முரணானதாகும்' என்று ஏதாவது நோட்டீசு விட்டீர்களா?

ப :—இல்லை; 'இதற்கு விளக்கம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை' என்று நினைத்தேன். 'ஹெல்மெட் வியாபாரி ஒருவரிடம் பேரம் பேசி முடிவு செய்துவிட்டு, இந்த அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்' என்று சொல்லிவிட்டு—பின்னால் விளக்கம் கேட்டிருப்பதால், 'இதற்கு விளக்கம் அவசியம் இல்லை' என்று கருதினேன்.

கே :—அவ்விதம் விளக்கம் கொடுக்க வேண்டியதில்லை என்று எப்படி நினைத்தீர்கள்?

ப :—யாரோ ஒரு வியாபாரியுடன் பேரம் பேசிவிட்டு கருணாநிதி இந்த அறிவிப்பைச் செய்திருக்கிறார் என்று சொல்லியிருப்பது என் மனதை மிகவும் புண்படுத்தியது. இதனைத் தெரிவித்துவிட்டு, கடைசியில் விளக்கம் கேட்டிருப்பது அர்த்தமற்றது என்று நான் கருதியதால் அதற்கு நான் விளக்கம் பெற விரும்பவில்லை.

கே :—'இந்தப் பிரசுரத்தில் கண்டிருக்கும் செய்தி தவறு; அதைத் திருத்துக' என்று 'நவசக்தி'க்கு ஏதாவது நோட்டீசு விட்டீர்களா?

ப :—இல்லை.

கே :—அமைச்சர் அவர்களே! தற்காலிகமாக இப்போது எழுந்த இந்தக் காரணத்தினால் அல்லாமல் தனிப்பட்ட முறையில் கணணதாசன்மீது தங்களுக்கு மனஸ்தாபமோ வெறுப்போ ஒன்றும் இல்லை அல்லவா?

ப :—என்னிடம் அவருக்கு நட்பு ஒன்றும் இல்லை.

கே :—அதை நான் கேட்கவில்லை; இதைத் தவிர தனிப்பட்ட முறையில் எதிரிக்கும்—தங்களுக்கும் ஏதாவது வெறுப்பு இல்லை அல்லவா?

ப :—என்மீது தனிப்பட்ட முறையில் வெறுப்புக் கொண்டு இதை எழுதியதாகக் கருதுகிறேன்.

கே :—தங்கள் மீது எதிரிக்கு வெறுப்பு இல்லை அல்லவா?

ப :—அரசியல் கொள்கைகளில் இருவருக்கும் விருப்பு--வெறுப்பு இருக்கிறது என்பது மட்டுமல்ல—தனிப்பட்ட முறையில் கண்ணதாசன் அவர்களுக்கு என்மீது வெறுப்பு உண்டு.

கே :—தங்களுக்கும் அவர்மீது ஏதேனும் வெறுப்பு உண்டா?

ப :—ஒன்றும் இில்லை.

கே :—அவர் தங்களைச் சந்திப்பது உண்டா?

(4-ம் பக்கம் பார்க்க)

முகவரி மாற்றம்

டேப் இராமச்சந்திரன்—
இராசப்பா குழுவினர்,
15, ஆஞ்சநேய நகர்,
இரண்டாவது சந்து,
இராயபுரம், சென்னை--13.

ஆட்சிமொழி மசோதா யாருக்காக?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் சட்டத்தின் கட்டளை—
அரசியல் சட்டத்தின் உயிர்—

என்றெல்லாம் சொல்லிச் சொல்லி, அரசியல் சட்டத்தின் உயிரையும், அதைக் கேட்டுக்கொண்டிருப்போரின் உயிரையும் ஒரு சேர இந்தி வெறியர்கள் சாகடித்துக் கொண்டிருக்கிறார்கள்!

மத்திய அரசின் வேலை வாய்ப்புக்களை நாடுவோருக்கு 'சேரும் போதே இந்தி மொழி தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை' என்பது, இதுவரை நடைமுறையில் இருப்பதும், இப்போது கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளதுமாகும்.

இது, அரசியல் சட்டத்தின் வாசகத்திற்கு முரணானதாம்—அலறுகிறார்கள் இந்தி வெறியர்கள்! 'அது கூடாது; ஒன்று—வேலையில் சேரும்போதே இந்தி தெரிந்திருக்க வேண்டும்; அல்லது ஆங்கிலம் தெரியாவிட்டாலும் பாதகமில்லை என்று இருக்க வேண்டும்' என்று வாதாடிக் கொண்டிருக்கிறார்கள்!

இதை, 'அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள 14 மொழிகளிலும், மத்திய வேலை வாய்ப்புத் தேர்வு நடைபெற வேண்டும்' என்று கழகம் கொடுத்துள்ள திட்டத்தில் ஏனோ இந்தி வெறியர்கள் காணவில்லை!

பதினான்கு மொழிகளில் தேர்வு நடப்பது நிச்சயமில்லை—

ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை—

இந்திதான் ஆட்சி மொழி—

இந்த மூன்று வளையத்திற்குள் சிக்கி இந்தி பேசாத மாநில மக்கள் இரண்டாந்தரக் குடிமக்கள் ஆவதைத் தவிர வேறு என்ன?

நேற்று நடைபெற்ற காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் இப்படித்தான் ஆலோசிக்கப்பட்டிருக்கிறதாம்—'மத்திய வேலைவாய்ப்பின்போது, இந்தியோ ஆங்கிலமோ தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று மசோதாவில் திருத்தம் வேண்டும்' என்று அங்கு ஆலோசிக்கப்பட்டதாம்; இந்த யோசனை, 'காங்கிரசு உறுப்பினர்களுக்குள்ளாகவே ஆதரவு பெற்றதாக அமையவில்லை' என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பயங்கரமான ஏற்பாட்டை மசோதாவில் புகுத்துவதற்கு, 'இலேசான திருத்தம்' என்று பெயர் சூட்டப்படுகிறது. இதனைப் பற்றிக் கழகப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கருத்தறிவிக்குமாறு தலைமையமைச்சரால் கேட்கப்பட்டிருக்கிறது; கட்சித் தலைவர் திரு. அன்பழகன் அவர்கள், இதுபற்றி ஏதும் சொல்ல மறுத்துவிட்டார்; 'அறிஞர் அண்ணா அவர்களிடம் கலந்தாலோசித்த பிறகுதான் எங்களுடைய திட்டவட்டமான கருத்தை இதுபற்றி அறிவிக்க முடியும்' என்று அவர் கூறினார்.

"மசோதாவின் நோக்கமே, இந்தி பேசாத மாநிலங்களின் நன்மையைக் கருதித்தானே தவிர, இந்தி மாநிலத்தவரின் வசதிக்காக அல்ல!

"எங்களுடைய முழுக் கோரிக்கை, 'அரசியல் சட்டமே உரிய வகையில் திருத்தப்படவேண்டும்' என்பதுதான்; ஆனால், அரசியல் சட்டத்தைத் திருத்துவதில் அரசாங்கத்திற்குள்ள சங்கடங்களைக் கருதி, தாக்கல் செய்யப்பட்டுள்ள மசோதாவை—அது எங்களுடைய விருப்பத்தினை முழு அளவு நிறைவேற்றவில்லையானாலும்—ஆதரிப்பதாகக் கழகம் முடிவெடுத்திருக்கிறது; இந்த மசோதாவிலும் மேற்கொண்டும் கலப்படமோ திருத்த விளையாட்டோ நடைபெற்றால், எங்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது"

என்று, தலைமையமைச்சரிடம் கழக உறுப்பினர்கள் அடுத்தடுத்து அழுத்தந்திருத்தமாக எடுத்துரைத்தனர்.

"காங்கிரசு நாடாளுமன்றக் கட்சிக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டிருக்கும் திருத்தங்களை, 'இலேசான திருத்தங்கள்' என்று ஏற்றுக்கொள்ள முடியாது"

என்று கழக உறுப்பினர்கள் அறிவித்தனர்.

"'மே' என்று இருப்பதை, 'ஷேல்' என்று மாற்றுமாறு நாங்கள் தெரிவிப்பதை, 'இலேசான திருத்தம்' என்று ஒப்புக்கொள்கிறீர்களா?"

என்றும் கழக உறுப்பினர்கள் கி. மனோகரனும், இரா. செழியனும், தலைமையமைச்சரிடம் திருப்பிக் கேட்டார்கள்.

இன்றைய நாடாளுமன்ற விவாதத்தில் தோற்றுவிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி என்னவென்றால், அது, மிக மோசமான இந்தி வெறியர்களான சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியின் முக்கியத் தலைவரான ராம் சேவக் யாதவ் என்பவர், 'கழக உறுப்பினர்களுடன் மசோதா பற்றி கலந்து பேச வேண்டும்' என்று விருப்பம் தெரிவித்திருப்பதாகும்.

விவாதத்தின்போது ஏற்படும் கடுமையையும், கோப உணர்ச்சிகளையும் தடுத்து, விவாதம் சுமூகமாக நடைபெறுவதற்கான வகையில்—உறுப்பினர்களிடம் காணப்பட வேண்டிய பொறுமையைக் கடைபிடிக்கும் வகையில், திருத்தங்களாக வரவிருக்கும் பொருள்கள் பற்றி அவர், கழக உறுப்பினர்களிடம் கலந்து பேச விழைந்திருக்கிறார்!

"அமைச்சர்கள் ஒரோர் கட்டத்தில் ஆங்கிலத்தில் பேச நேரிடுவதையும் சகித்துக்கொள்ள முடியாத முதல்தர இந்தி வெறிகொண்ட கட்சியொன்றின் தலைவரிடம் விவாதத்தில் பொறுமையைக் கடைபிடிப்பது பற்றி, பொறுமையே தங்கள் பண்பாகக்கொண்டிருக்கும் கழக உறுப்பினர்கள் கலந்து பேசுவதில் என்ன பயனளிக்க முடியும்?"

என்று தோழர்கள் மனோகரனும், செழியனும் கேட்டார்கள்.

தென்னிந்தியர்கட்குச் சொந்தமான மொழிகளே இல்லாததுபோலவும், அதன் காரணமாகவே, 'ஆங்கிலம் நீடிக்க வேண்டும்' என்று அவர்கள் கேட்பது போலவும் இந்தி வெறியர்கள் கருதி நடந்துகொள்வதைக் கழக உறுப்பினர் இருவரும் யாதவ் அவர்களிடம் சுட்டிக்காட்டினர்.

கழக உறுப்பினர்கள் தெரிவித்தவைகளைக் கேட்டபிறகு, திரு. யாதவ், 'இனி எந்த அமைச்சரும் விரும்பி ஆங்கிலத்தில் பேசினால் அதனை எங்கள் கட்சியினர் எதிர்க்கமாட்டார்கள்' என்று தாம் உறுதியளிப்பதாகத் தெரிவித்து, கழக உறுப்பினர்களிடம் தாம் கலந்து பேச விரும்புவதை வலியுறுத்தினார்.

கழக உறுப்பினர்களும், சம்யுக்த சோஷலிஸ்டு உறுப்பினர்களும் இன்று கலந்து பேசக்கூடும் என்று கருதப்படுகிறது.

இந்திவெறியர்களின் வன்முறைகளுக்கு முடிவுகட்டுக!

தென்னாட்டவருக்கும் கொந்தளிப்பு உணர்ச்சி கொள்ளத் தெரியும்

நாடாளுமன்றத்தில் எச்சரிக்கை

நாடாளுமன்றத்தில் இன்றைய விவாதத்தின் பெரும் பகுதி நேரம், டெல்லியில் இந்தி வெறியர் ஆங்கிலத்திற்கு எதிர்ப்பாகச் செயல்படுவதாகச் சொல்லிக்கொண்டு வன்முறையில் இறங்கிய சம்பவங்களைப்பற்றி விவாதிப்பதாகவே அமைந்தது.

'மதராசி' பள்ளிக்கூடம் உள்பட பள்ளிகள் தாக்கப்பட்டது குறித்தும், 'சதர்ன் எக்ஸ்பிரஸ்' புகைவண்டியை ஓடவிடாமல் தடுத்து நிறுத்தியது பற்றியும் பல உறுப்பினர்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

தென்னிந்தியாவிலிருந்துவரும் புகைவண்டிகளில் வந்த பயணிகள் பலர் பெரும் அவதிக்குள்ளாக நேர்ந்தது பற்றி உறுப்பினர்கள் கவலை தெரிவித்திருக்கின்றனர்.

கழக உறுப்பினர் வி. கிருஷ்ணமூர்த்தி, கம்யூனிஸ்டு உறுப்பினர் அனந்தன் நம்பியார், பிரஜா சோஷலிஸ்டு உறுப்பினர் லக்கய்யா ஆகியோர் டில்லியிலுள்ள தென்னிந்தியர்களுக்குப் பாதுகாப்பற்றுப் போயிருப்பது குறித்தும், இதனைக் கவனித்துப் போதிய பாதுகாப்பு அளிக்க அரசு உடன் முனைந்து ஆவன செய்யவேண்டும் என்றும் முழங்கினர்.

அமைச்சர் சுக்லா என்பவர், உறுப்பினர்களின் அச்சத்தினை உணர்ந்துகொண்ட வகையில், இதுபற்றி உடன் கவனித்து, போதிய நடவடிக்கை எடுத்துக் கொள்வதாகவும், ஓடும் புகைவண்டிகளை வழிமறிப்பதற்கு யாரும் துணியாத வகையில் பார்த்துக்கொள்வதாகவும் உறுதி அளித்தார்.

"ஆங்கில எதிர்ப்பு எனும் போர்வையில், டெல்லியில் நடைபெறும் வன்முறைகளுக்கு உடனடியாக அரசு முற்றுப் புள்ளிவைக்க வேண்டும்"
என்று தோழர்கள் வெ. கிருஷ்ணமூர்த்தி, அனந்தன் நம்பியார், லிங்கப்பா ஆகியோர் உறுதியாகக் குரலெழுப்பினர்.

"டெல்லியில் நடைபெற்ற ஆங்கில எதிர்ப்பு ரகளையில் யாரும் காயப்படுத்தப்படவில்லை" என்று இந்தி வெறியர்கள் சிலர் தெரிவித்ததை, தென்னாட்டு உறுப்பினர்கள் அனைவரும் கட்சி பேதமில்லாமல் வன்மையாக மறுத்தனர்; 'படுகாயமடைந்த பள்ளிப் பிள்ளைகளை நாங்கள் அறிவோம்' என்று அவர்கள் பதிலிறுத்தனர்.

இது சம்பந்தமாக, இந்தி வெறியர்களுக்கும்—தென்னாட்டு உறுப்பினர்களுக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தின்போது பேராசிரியர் என். ஜி. ரங்கா குறுக்கிட்டு,

"இந்தி வெறியர்களைக் காட்டிலும் தென்னாட்டவர், உணர்ச்சியில் குறைந்தவர்கள் அல்லர் என்பதை அறிந்துகொள்ளுங்கள்; இந்தி வெறியர்கள் அடக்கத்தோடு பழகத் தெரிந்துகொள்ள வேண்டும்"

என்று உணர்ச்சிபொங்க மேசையை ஓங்கியடித்துச் சொன்னார்!

"நாட்டுப் பற்று என்பது இந்தி வெறியர்களுக்கு மட்டுமே சொந்தமல்ல; வங்காளத்தில் எந்தச் சக்தியாலும் இந்தியைத் திணிக்க முடியாது என்பதை, வெறியர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்"

என்று, வங்காளத்து உறுப்பினர் சமார் குகா என்பவர் தெரிவித்தார்.

திருப்பத்தூர் நகராட்சி 80-வது ஆண்டு நிறைவு விழா

வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகராட்சி 80-வது ஆண்டு நிறைவு விழா, நகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள சி. கண்ணப்பனார் பந்தலில்—எம். விசுவநாதனார் அரங்கில் டிச. 11, 12. 13-ம் நாட்களில், நடைபெறும்.

விழா நாட்களில், முதலமைச்சர் அண்ணா அவர்களும், மாண்புமிகு அமைச்சர்கள், பெரியார் ஈ. வே. ரா., சட்டமன்றப் பேரவைத் தலைவர் சி. பா. ஆதித்தனார், மற்றும் நாடாளுமன்ற—சட்டமன்ற உறுப்பினர்கள், அரசியல் மேதைகள், கலைஞர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவர்.

அமைச்சர் மு. கருணாநிதி சாட்சியம்

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ப :—வழக்கமாகச் சந்தித்துப் பார்ப்பது இல்லை; எப்போதாவது பார்ப்பார்.

கே :—அண்மையில் தாங்கள் விபத்துக்குள்ளானபோது அவர் தங்களை வந்து பார்த்தது உண்மையா?

ப :—பார்த்தார்; விபத்து நேரிட்ட சமயம் வந்துபார்ப்பதால் 'வெறுப்பு இல்லை' என்று சொல்லி விடுவதற்கில்லை.

இரண்டாவது எதிரி வழக்கறிஞர் குறுக்கு விசாரணை

இரண்டாவது எதிரி திரு. தனுஷ்கோடி அவர்களின் வழக்கறிஞர், அமைச்சர் அவர்களை அடுத்ததாகக் குறுக்கு விசாரணை செய்தார்.

கே :—இதில் சம்பந்தப்பட்ட இரண்டாவது எதிரியான தனுஷ்கோடி அவர்களுக்கு தனியாகத் தாங்கள் ஏதாவது நோட்டீசு கொடுத்திருக்கிறீர்களா?

ப :—இல்லை.

கே :—அவர்களை தங்களுக்கு முன்பே தெரியுமா?

ப :—தெரியாது.

மூன்றாவது எதிரி வழக்கறிஞர் குறுக்கு விசாரணை

மூன்றாவது எதிரி திரு. சம்பத் அவர்களின் வழக்கறிஞர், அமைச்சர் அவர்களை அடுத்ததாகக் குறுக்கு விசாரணை செய்தார்.

கே :—சர்க்கார் வழக்கறிஞர் அவர்கள் தங்களிடம் கேட்டபோது, தாங்கள் இதுபற்றி நடவடிக்கை எடுப்பதற்காக ஐ. ஜி. அவர்களிடம், தொடர்பு கொண்டதாகக் குறிப்பிட்டீர்கள்; அவ்விதம் சொல்லியபோது யார் யார்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஏதாவது சொன்னீர்களா?

ப :—யார் யார்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லவில்லை; 'பத்திரிகையில் வந்துள்ள செய்தியின்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்று குறிப்பிட்டேன்.

கே :—தாங்கள் அமைச்சராகப் பதவியேற்பதற்கு முன்னால் 'முரசொலி' பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றியிருக்கிறீர்கள் அல்லவா?

ப :—ஆம்; அமைச்சராகப் பதவியேற்கும்வரையில், ஆசிரியராக இருந்தேன்.

கே :—அமைச்சராகப் பதவியேற்ற பின்பும் ஆசிரியராகப் பதவி வகித்து வருகிறீர்களா, இல்லையா?

ப :—இல்லை.

கே :—அப்படி ஆசிரியர் பதவியிலிருந்து விலகியதை அரசு அலுவலகத்திற்குத் தெரிவித்திருக்கிறீர்களா? அப்படித் தெரிவித்திருந்தால் எந்தத் தேதியில் தெரிவித்தீர்கள்?

ப :— தெரிவித்திருக்கிறேன்; தேதி நினைவு இல்லை.

கே :—குறிப்பாகக் கேட்கிறேன்—பதவியேற்ற 24 மணி நேரத்திற்குள் நீங்கள் ஆசிரியர் பதவியை விட்டுவிட்டீர்களா என்பது நினைவு இருக்கிறதா?

ப :— இருக்கலாம்; சரியாக நினைவு இல்லை.

கே :—நீங்கள் ஆசிரியர் பதவியை ரத்து செய்த பின்பும் தொடர்ந்து 'முரசொலி' பத்திரிகையில் உங்கள் பெயர் வருவது உங்களுக்குத் தெரியுமா?

ப :—'ஆசிரியர்' என்பதில் என்னுடைய பெயர் வருவதில்லை; என்னைப் பற்றிய செய்திகள் வருகின்றன.

கே :—'நிறுவனர்' என்ற பெயரில் வருகிறதா?

ப :—வந்தது.

கே :—'நிறுவனர்' என்ற முறையில், அதில் வருகின்ற செய்திகளுக்கு நீங்கள் பொறுப்பு ஏற்க முன்வருவீர்களா?

ப :—முன்வரமாட்டேன்.

கே :—உங்களுக்கும் — சம்பத் அவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் வெறுப்புணர்ச்சி ஏதாவது உண்டா?

ப :—அவருக்கு என்மீது வெறுப்புண்டு.

கே :—பரஸ்பரம் உண்டு அல்லவா?

ப :—ஆம்.

[இத்துடன் இன்றைய வழக்கு விசாரணை முடிவுற்றது.]

பாலர் அரங்கம்

டிச. 10-ந் தேதி மாலை 2-மணி; 4-15 மணிக்கு

'அமேசானில் டார்ஜான்'

(எம்.ஜி.எம். படம்)

கட்டணம் வழக்கம்போல்

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

சட்டம் ஆகிய இரண்டுமே மக்களவையில் நிறைவேற்றப்பட்டால், 'செல்லாது' எனக் கோரி தலைமை நீதிமன்றத்தில் (சுப்ரீம்கோர்ட்டு) வழக்குத் தொடரப் போவதாக அறிவித்திருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.)